பொது சன நூலகம்
-4 OCT 2000
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

336.



விலை ரூபா 5.00

# வலம்புரி
# VALAMPURI

உள்ளே

க.பொ.த.(சா/த) மாணவருக்கான
கணிதம் பகுதி 1

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 18 புதன்கிழமை (04-10-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 289

## ★ நேற்று நண்பகல்வேளை
# கூட்டணி காரியாலயம் முன்
# தீவக மக்கள் ஆர்ப்பாட்டம்!

### சங்கரியின் கொடும்பாவியும்எரிக்கப்பட்டது

(அலுவலக நிருபர்)

யாழ்நகரில் தீவுப்பகுதி மக்களால் ஆர்ப்பாட்டஊர்வலமொன்றுநேற்று நண்பகல் நடத்தப்பட்டது. இந்த ஊர்வலத்தில் வந்த மக்கள் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயம முன்பாக, கூட்டணியினருக கெதிரான கோஷங்களை எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

தீவுப்பகுதியில் இருந்து பல நூற்றுக்கணக்கான மக்கள் மினிபஸ்களிலும் மற்றும் வாகனங்களிலும் வந்து துரையப்பா விளையாட்டரங்கு முன்றலில் ஒன்றுகூடி பதாகைகளை தாங்கியவண்ணம் கோஷங்களைத் எழுப்பிய வாறு முனீஸ்வரன் வீதிவழியாக யாழ் ஆஸ்பத்திரி வீதியை வந்தடைந்தனர்.

பின்னர் ஆஸ்பத்திரி வீதியிலிருந்து கஸ்தூரியார் வீதி வழியாக ஸ்ரான்லி வீதியை வந்தடைந்த ஊர்வலத்தினர் தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயம் முன்பாக கூட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ★ கூட்டணிக்கு எதிராக
## ஆர்ப்பாட்டம் செய்தவர்களை மக்கள் அறிவார்கள்
### ஆனந்தசங்கரி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலக வாசலை நேற்று நண்பகல் ஈ.பி.டி.பி.யின் ஆதரவாளர்கள் எனக்கருதக் கூடிய சில கும்பல்கள் முற்றுகையிட்டு பெரும் கூச்சலையும் குழப்பத்தினையும் ஏற்படுத்தி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியதாக அக்கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ● தீவக மக்களின் ஆர்ப்பாட்டத்திற்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை
### ஈ.பி.டி.பி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

...பாடு செய்யவில்லை என அ...

## தேர்தல் வன்முறை குறைவு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது தேர்தல் வன்முறைகள் குறைவாகவே இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் வரையில் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்த நாள் முதல் 18 முறைப்பாடுகளே கிடைத்துள்ளது. பாரிய சம்பவங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய யூனியன்குழு தேர்தல் வன்முறை பற்றி ஆராய்வு

ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த தேர்தல்கண்காணிப்புக்குழுவினர் நேற்று திருமலைக்குச் சென்று தேர்தல் வன்முறைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்புக்குழுவின் ஜோன் பிறிடானன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பு நிலையங்களுக்கு ஆயுதம் எடுத்துச் செல்ல அனுமதியில்லை

(வவுனியா)

எதிர் வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களுக்குள்ளேயோ அல்லது வாக்கு எண்ணும் நிலையங்களுக்குள்ளேயோ ஆயுதங்கள் எடுத்துச் செல்ல எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைகுண்டுதாரிகள் 47பேர் கொழும்புநகரில் ஊடுருவல்?

பொதுத்தேர்தலுக்கு இன்னமும் ஆறு நாட்கள் இருக்கையில் கொழும்பு நகருக்குள் தற்கொலைக் குண்டுதாரிகள் 47 பேர் ஊடுருவியிருப்பதாகவும் இவர்களை அடையாளம் காட்டித்தருமாறு பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் கேட்டுக் கொண்டுள்ளது. கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ள தற்கொலைக் குண்டு தாரிகளின் நடமாட்டங்களை பொது மக்கள் அறிந்திருந்தால் அவர்கள் பற்றிய தகவல்களைத் தந்துதவ வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது; விடுதலைப்புலிகள் சிங்கள, தமிழ் மக்களைப்பயன் படுத்தி குண்டு மற்றும் வெடி பொருட்களைக் கடத்துகிறார்கள். இவ் விடயத்தில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ...மகார் குண்டு வெடிப்பில் இறந்தவர்கள் ... ஒருவர் புலி...

## ஈ. பி. டி. பி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லி வீதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்திற்கு முன்பாக தீவகப்பகுதி மக்களால் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை எந்த வகையிலும் ஈ.பி.டி.பி. ஏற்பாடு செய்யவில்லை என அக்கட்சியினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது இராணுவத்தினரால் தீவகம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வாக்களிப்பவர்கள் மக்களே எவரும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

எமது தேர்தல் பிரச்சாரம் ஊர்காவற்றுறையில் நடைபெற்ற போது அங்கு வருகை தந்த குறிப்பிட்ட ஒரு கட்சியினர் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டதுடன் போஸ்ரர்கள் பிரசுரங்களைக் கிழித்தெறிந்து கெட்ட வார்த்தைகளால் எம்மை ஏசி, கல்வீச்சிலும் ஈடுபட்டு ஜனநாயக நடவடிக்கைக்கு விரோதமாக நடந்து கொண்டனர்.

இவ் ஜனநாயக விரோத செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியைச் சேர்ந்த சு. சுபத்திரன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

ஓயாத அலைகள்-4 நடவடிக்கையின் போது

● தில்லைபழகு/தில்லை (பிரியேல் அருந்தவராஜன்) மன்னார்

● கப்டன் ஈழவன் (மணியம் பார்த்திபன்) கிளிநொச்சி

● நேசமலர் (வெள்ளையன் கலா)

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மூதூர் குண்டு வெடிப்பில் இறந்தவர்கள் எண்ணிக்கை 27 ஆக அதிகரிப்பு

(மூதூர்)

மூதூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் தொகை 27ஆக உயர்ந்துள்ளது.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக் கிரியைகளுக்கு தலா 2ஆயிரம் ரூபாவை அரசு உடனடியாக வழங்கியுள்ளது.

இதேவேளை இக்குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் இழப்பீடாக தலா 50 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு திருமலை அரச அதிபர் மூதூர் உதவி அரச அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரினால் இந்நிதி வழங்கப்படவுள்ளது இதன் முதற்கட்டமாக 10ஆயிரம் ரூபா உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

வந்தாறு மூலையில் வீதிப் பாது காப்பில ஈடுபட்டிருந்த படையினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் படைத் தரப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செங்கலடி இராணுவ முகாமைச் சேர்ந்த ஏ. எவ் ஜெயசுந்தர என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

(ந-108)

# இந்துக்கோவில்கள் ஆயுதங்களை மறைத்து வைக்கும் தளங்களாம்!

## பிரதிப் பெலிஸ் மா அதிபர் கூறுகிறார்

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு மதகுருமார் ஒத்துழைப்பு வழங்க வேண்டும், மதகுரு மாரின் ஒத்துழைப்பு இருந்தாலே குண்டுத் தாக்குதலைத் தடுக்கலாம்என்றுபிரதிப் பொலிஸ் மாஅதிபர் மதகுருமார் முன்னிலையில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இக்கூட்டத்தில்ஆயிரத்திற்கு மேற்பட்ட குருமார்கலந்து கொண்டனர்.

இந்துக் கோவில்கள், தீவிரவாதிகளுக்கு புகலிடம்அளித்தும், வெடி பொருட்களை மறைத்து வைக்கும் தளமாகவும், விளங்குவதால் இத்தகைய உதவிகளைத் தீவிரவாதிகளுக்கு செய்யக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இடம் பெயர்ந்தோருக்கு

## ரூபா 2 ஆயிரம் வழங்கப்படும்

(கல்வியங்காடு)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு இம் மாதம் 6 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு ரூபா 2000 வழங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மேற்குறித்த பிரதேச செயலகத்தில் விண்ணப்பத்துடன் முத்திரை ஒட்டிகைபொப்பம் இட்டவர்களுக்கே இப்பணம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே/91 முதல் ஜே/96 வரையான கிராமசேவகர் பிரிவு மக்களுக்கும், ஜே/106 முதல் ஜே/109 வரையான கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மொத்தம் பத்து கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 500 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் முதற்கட்டமாக மேற்படி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள முடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி கொடுப்பனவுகளை பெறவுள்ள இடம் பெயர்ந்த மக்கள் தாம் தற்போது வசிக்கும் பகுதியில் உள்ள கிராமசேவை அலுவலருடன் தொடர்பு கொண்டு அவரின் உறுதிப்படுத்திய கடிதத்துடனும், அடையாள அட்டையுடனும் மேற்படி பிரதேச செயலகத்திற்கு சமுகம் கொடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-54-03)

# மட்டு. மாவட்ட தேர்தல்பிரசாரத்தில் சிங்களக்கட்சிகள் நாட்டமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் தென்பகுதியைச்சேர்ந்த கட்சிகளான சிஹலஉறுமய, சிங்களயே மஹாசம்மதபூமி புத்திரக்கட்சி, றுகுணுமக்கள்கட்சி மக்கள்விடுதலை முன்னணி, ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி, ஆகியகட்சிகள் தேர்தலுக்கு இன்னும் ஏழு நாட்களே இருக்கும்நிலையில் இதுவரை எவ்விதபிரச்சாரப் பணிகளையும் மேற்கொள்ளவில்லை.

மேற்படி கட்சிகளின்வேட்பாளர்களோ, கட்சிப்பிரதிகளோ இம்மாவட்டத்திற்கு விஜயம்எதனையும் மேற்கொள்ளவோ, சுவரொட்டிகளையோ, பிரசுரங்களையோ, பொதுக்கூட்டங்களையோ நடத்தவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நேரமார் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மீதான இருமுறை படுகொலை முயற்சியின்பின்னர் இம்மாவட்டத்தில் தேர்தல் பிரசாரப்பணிகள் மந்தநிலையை அடைந்துள்ளன. (க-60)

## பொது மக்கள் பாராட்டு

(நல்லூர்)

திருநெல்வேலி கலாசாலை வீதிப்பகுதியிலுள்ள முத்துமாரியம்மன் கோவிலடி கிணற்றில் இருந்து மக்கள தண்ணீரைப் பெற்றுப் பயனடைவதற்காக, நல்லூர்ப் பிரதேச சபை நீரிறைக்கும் மோட்டார் ஒன்றைப் பொருத்தி உதவியுள்ளது.

இக் கிணற்றின் மூலம் 400 பொதுமக்கள் வரையில் பயன் பெற்று வருகின்றனர்.

நல்லூர் பிரதேச சபையின் பணியைப்பொதுமக்கள் நன்றியுணர்வுடன் பாராட்டியுள்ளனர். (க-103)

# ஜனாதிபதி, செல்லுமிடமெங்கும் தொல்லை கொடுக்கும் எதிர்க்கட்சிதலைவர் ரணில்விக்கிரமசிங்க

(கொழும்பு)

ஒக்டோபர் 10 ஆம் திகதி இந்நாட்டின் அறிவுபெற்ற மக்கள், தங்களையும் தங்கள் கட்சியையும் கைவிட்டு விடுவார்கள்என்பதுபுதுமையல்ல;

இவ்வாறு தெரிவிக்கும் கடிதம் ஒன்றினை, தற்போது லண்டன்பயணம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா ... கிரமசிங்க அனுப்பிவைத்துள்ளார்;

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதிசெயலகம் கூறுவதுபோன்று, நீங்கள் வைத்தியசோதனைக்காகவோ மிக முக்கிய தனிப்பட்ட தேவைக்காகவோ அண்மையில் வெளிநாட்டுக்குச் செல்லவில்லை.

# இராசி பலன்

04/ 10 / 2000
(புரட்டாதி 18. புதன்)
சப்தமி
பி.இ. 4. 22 வரை
மூலம் - முழுவதும்
இராகுகாலம்
12.02 - 1.32
சுபநேரம்
4.32 - 6.02

**மேடம்**
காரிய அனுகூலம், தந்தை வழி உறவு, மனச் சஞ்சலம், பிரயாணம்

**இடபம்**
துக்கம், நண்பர்கள் விரோதம், கடன்சுமை, இறுவியாதி

**மிதுனம்**
போசன சுகம், தனவரவு, பிரயாணம், சுவாரஸ்யம்

**கடகம்**
தொழில்விருத்தி. சந்தோசமான செய்தி, காரிய நன்மை

**சிங்கம்**
உடல் உபாதை, தேவையற்ற கவலை, தடுமாற்றம்

**கன்னி**
சுகக்குறைவு, உறவினர் நம்பிக்கையின்மை, தன விரயம், வாகன சுகம்

**துலாம்**
தன வரவு, சென்ற இடத்தில் செல்வாக்கு, சகோதரர்களால் உதவி, பிரயாணம்

**விருச்சிகம்**
வாக்குக்சலசும், காரிய தாமதம், அடகீர்த்தி, எதிர்பாராத நன்மை

**தனுசு**
ஆத்ம சிந்தனை, ஆரோக்கியம், காரிய ஜெயம், தன வரவு

**மகரம்**
பிரயாணக் கஷ்டம், தன விரயம், சயன சுகக் குறைவு

**கும்பம்**
தனவரவு, சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப சுகம்

**மீனம்**
இலட்சுமீகரம், தொழில் அதிகாரம், வீண்பயம், அதிகாரிகள் சந்திப்பு

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## இன்று வானொலியில்

### ஸ்ரீகாந்தாவின் உரை

யாழ். மாவட்டத்தில் ரெலோவின் ஆதரவுடன் போட்டியிடும் சுயேட்சைக் குழுவின் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி என்.

# மத்திய எழுதுநர் சேவை நியமனக் கடிதங்கள் பெறாதோருக்கு யாழ். அரச அதிபர் உடன் அழைப்பு

மத்திய அரசாங்க எழுதுநர் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு இதுவரை பதவியை பொறுப் பேற்றுக் கொள்ளாத பின்வருவோர் தமது நியமனக் கடிதங்களை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கேட்டுள்ளார்.

வி.நந்த கோபன், கே. பிரபாகரமூர்த்தி எம். றமணன் ரீ. சிவகுமார், எஸ். சாந்தி எஸ்.சஞ்சயன், என் மோகனா கே. றுகசி ஜீ. சிவதர்சினி ரீ. கமலவேணி. மேற்படி நபர்களை விரைவில் நியமனக் கடிதங்களை பெற்றுக் கொண்டு கடமைகளை பொறுப்பேற்கும் படி மேலும் கூறப்பட்டுள்ளது. (க-12)

# தென்மராட்சியிலிருந்து இடம்பெயரும் மக்களை வரவேற்பதில் அரசியல் கட்சிகள் போட்டியாம்

தென்மராட்சி யுத்தநிலவரங்கள் காரணமாக இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதிக்கு வரும் பொதுமக்களைப் பராமரிப்பதில், தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் போட்டா போட்டி போட்டுச் செயற்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

இதனால், ஓர் கட்சியின் பராமரிப்பில் இருக்கும் மக்கள் கூட்டத்தை இன்னோர் கட்சி பலவந்தமாக வேறு இடத்திற்கு ஏற்றிச்சென்று பராமரித்துவரும் சம்பவங்களும் நடைபெற்று வருகிறது.

கட்சிகளின் இவ் "அன்புத் தொல்லை" இடம்பெயர்ந்து இன்னலுறும் மக்களுக்கு மேலும் துன்பம் விளைவிக்கும் செயலாக அமைவதாக சம்பந்தப்பட்டோர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளையில் கடந்த கால இடம்பெயர்வின் போது தம்மை ஏறெடுத்தும் பார்க்காத கட்சியினர் தற்போது மட்டும் திடீர் கரிசனம் காட்டுவது வாக்கு வேட்டைக்காகவே என்று பலரும் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர். (க-உ-43)

# பிரச்சார நடவடிக்கையை அடுத்து மூன்று வேட்பாளர் படுகொலை

செய்தபின்னர் கடந்த 20 நாட்களுக்குள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பொதுஜனஐக்கிய முன்னணியின் மூன்று பிரதான வேட்பாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி தலைமை வேட்பாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான அமைச்சர் எம் எச்.எம். அஷ்ரஃப், மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் செழியன் பேரின்பநாயகம், திருமலை மாவட்ட வேட்பாளர் எம். பைதுல்லாஹ் ஆகியோர் கொல்லப்பட்டவர்களாவர்.

மேற்படி வேட்பாளர்களின் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் பொதுத்தேர்தல் பிரச்சாரப் பணிகள் மந்தநிலையடைந்துள்ளன.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க நாளை அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக சம்பந்தப்பட்ட கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பொதுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல்

பயண...

(4ஆம் பக்கத் தொடர்ச்)

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 152247 ஏ | 152247 பி |
| 155 18 ஏ | 155218 பி |
| 158744 ஏ | 158744 பி |
| 160493 ஏ | 160509 ஏ |
| 161521 ஏ | 161522 ஏ |
| 161528 பி | 161568 ஏ |
| 161663 ஏ | 161663 பி |
| 161663 சி | 161673 ஏ |
| 161913 ஏ | 161913 பி |
| 161913 சி | |

**உடுவில்**

| | |
|---|---|
| 142068 ஏ | 142068 பி |
| 142068 சி | 143872 ஏ |
| 143872 பி | 144183 ஏ |
| 155160 ஏ | 155160 பி |
| 157894 ஏ | 157894 பி |
| 157894 சி | 158638 ஏ |
| 158638 பி | 158760 ஏ |
| 158760 பி | 160484 ஏ |
| 160484 பி | 160484 சி |
| 160758 ஏ | 160758 பி |
| 160758 சி | 160770 ஏ |
| 160770 சி | 160886 ஏ |
| 169887 ஏ | 160887 பி |
| 160939 ஏ | 160939 பி |

கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்


## விஞ்ஞானபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### அறிவித்தல்

09 - 10 - 2000 ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. இப்பரீட்சைகள் 20-10-2000 ஆம் திகதி ஆரம்பமாகும். இப்பரீட்சைகளுக்கான கால அட்டவணை விஞ்ஞானபீட விளம்பரப் பலகைகளில் பார்வைக்கு இடப்பட்டுள்ளது.

பதிவாளர்

(இ/850)


யில் வெளிநாட்டுக்குச் செல்லவில்லை.

நாட்டில் தேர்தல் வன்முறைகள் தலைவிரித்தாடுகின்றன. பொதுமக்கள் குண்டுத்தாக்குதலில் அநியாயமாய் பலியாகின்றனர்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களால் அமைச்சர்கள் பலியாகின்றனர் தேர்தலுக்காக அரசஊடகங்களும், அரசவாகனங்களும் பயன்படுத்தும் அநியாயம் தொடர்கிறது.

ஒழுக்கம் குன்றிய, கீழ்த்தரமான உங்கள் அமைச்சர் ஒருவரை வீராங்கனை சுசந்திகா உலகஅரங்கிற்கே அறிமுகப் படுத்தியுள்ளார்.

இதன்காரணமாகஇலங்கை பற்றிய தவறான பார்வை உலகத்தில் எழுந்துள்ளது.

இந்தவேளையில், உங்களை நம்பிநின்றமக்களை முழுமையாக நட்டாற்றில் கைவிட்டு வெளி நாடுசெல்வது முறையானதா?

இது உங்கள் பொறுப்பை அவமதிக்கும் செயலாகாதா? நீங்கள் இந்தநாட்டுமக்களை ஏமாற்றியிருக்கும் விதம்பற்றி பொதுமக்களுக்கு விளக்க எனக்குஇடமளிக்கவேண்டும்.

உலகின் எந்தமூலைக்கும் தாங்கள் சென்றாலும், நான் தொடர்ந்தும் உண்மைநிலையைச் சுட்டிக்காட்டி கடிதம் எழுதுவேன். (உ)

குழுவின் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவின் தேர்தல்பிரச்சார உரை இன்று இரவு 9:15 மணிக்கு யாழ். சேவையில் ஒலி பரப்பப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## யாழ்ப்பாணத்தில் ஐ. தே. க கூட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3; 30 மணிக்கு நல்லூரில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கொழும்பில் இருந்து ஐ. தே. க. வின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-12)

| | |
|---|---|
| 169887 ஏ | 160887 பி |
| 160939 ஏ | 160939 பி |
| 160939 சி | 161514 ஏ |
| 161593 ஏ | 161593 பி |
| 161593 சி | 161593 டி |
| 161624 ஏ | 161624 பி |
| 161624 சி | 161628 ஏ |
| 161658 ஏ | 161679 ஏ |
| 161679 பி | 161679 சி |
| 161773 ஏ | 161773 பி |
| 161797 ஏ | 161818 ஏ |
| 161818 பி | 161922 ஏ |
| 161949 ஏ | 161970 ஏ |
| 161970 பி | 161976 ஏ |
| 161976 பி | 161977 ஏ |
| 193896 ஏ | 157210 ஏ |
| 157606 ஏ | 157606 பி |
| 157606 சி | 157606 டி. |
| 157634 ஏ | (சு) |

சம்பந்தப்பட்ட கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(சு-60)

## லாம்புகள் வழங்கப்பட்டன

இடம் பெயர்ந்து ஆனைக்கோட்டை ஒ. எல். ஆர் முகாமில் தங்கியிருக்கும் 125 குடும்பங்களுக்கு கடந்த 28ம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அரிக்கன் லாம்புகள் வழங்கப்பட்டது.

யுனிசெவ் நிறுவனத்தால் இந்த லாம்புகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-120)


யுத்தம் நிறுத்தப்பட்டு, பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்க தேவை ஆட்சிமன்றமே! அதற்காக ஸ்ரீகஜனுக்கு (ஐ பி.சி ஆஞ்சநேயர்) வாக்களியுங்கள்!



X 8 X

உங்கள் வாக்கு எஸ். ஸ்ரீகஜனுக்கே!

(இ-845)

# இருபக்க ஆயுதங்களின் மத்தியில்

# வாக்களிக்க முடியாது; வடபகுதிமக்கள்திணறல்

## வண. மககல் புஞ்யதேரர் விசேடபேட்டி

(கொழும்பு)

வட பகுதியில் வாக்காளர் இருபக்க ஆயுதங்களின் மத்தியில் இருப்பதால் தமது வாக்கைசரிவரப் பயன்படுத்துவதில் பெரிதும் சங்கட நிலையில் உள்ளதாக வண. மககல் புஞ்யதேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றிற்கு அண்மையில் வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் போதகராக செயற்பட்டுவரும் இவர் மேலும் தெரிவிக்கையில்; தென்பகுதி வாக்காளர்கூட தமது வாக்குரிமையை பிரயோகிப்பதில் மகிரதப் பிரயத்தனம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்குப் பிரச்சினை இல்லையெனில் பிரபாகரன் ஏன் உருவாக வேண்டும்?

மரணத்தை மாலையாக அணிந்தஇளைஞர்களும், தற்கொலை போராளிகளும் உருவாகக் காரணம்என்ன?

தமிழர்களுக்குப் பிரச்சினை இல்லை என்று கூறுபவர்கள் அறிவிலிகள். அவர்களைப் பற்றி அதிகம் கூறத்தேவையில்லை.

அவர் தொடர்ந்து பேட்டியளிக்கையில், உத்தேச அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை. பல இழப்புக்களைச் சந்தித்த அவர்களுக்கு இதில் கூறப்பட்டுள்ள தீர்வுகள் அரைகுறைத் தன்மையுடையவை.

விடுதலைப் புலிகளை இணைத்து அவர்களுடைய சம்மதத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்;

பெரும்பான்மை இனத்தவருடைய பெரும்பான்மை விரும்பும் சிறுபான்மை இனத்தவரின்பெரும்பான்மை விரும்பும் கொண்டதாக அத்தீர்வு அமைய வேண்டும்.

இது நடைமுறைச் சாத்தியமாக அனைத்து முயற்சிகளையும் அரசு எடுக்க வேண்டும்;

அவரவர்க்குரிய பிரச்சினைக்கான தீர்வுகளை கிள்ளிக் கொடுக்காது அள்ளிக் கொடுக்க அரசு முன்வர வேண்டும். தொடர்ந்து பேட்டியளிக்கையில், அரசியல் லாபம் கருதியே வடக்கில் போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தேர்தலை நடத்துவதன் மூலம் சமாதானம் பிறக்குமா?

சிவில் நிர்வாகம் ஏற்படுமா இழந்த சொத்துக்களைப் பெற்றுக்கொடுக்கத் தான் முடியுமா? என்றும் கேள்விகளை தொடுத்தார்.

வடபகுதியுத்த அழிவுகளை தகவல் தொடர்பு சாதனங்களூடாக கண்ணுறும் வேளை என் மனத்தில் இரத்தக்கண்ணீர் வடிகிறது. வேதனை ஏற்படுகிறது என்றார். (க-உ)

### கற்றல் உபகரணங்கள் வழங்கல்

[நல்லூர்]

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில், 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஆசிரியர் தினத்தன்று, வறுமைக் கோட்டின் கீழுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

10 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த கற்றல் உபகரணங்கள், மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக நம்பகரமாக தெரியவருகிறது. [ச-103]

# கட்டடங்கள் உயர்வதால் மட்டும் கல்வியில் உயர்வடைய முடியாது

## கல்வி திணைக்கள பொறியியலாளர் தெரிவிப்பு

(அரியாலை)

'கட்டடங்களை வானுயர அமைப்பதாலோ அல்லது அவற்றை புனர் நிர்மாணம் செய்வதாலோ ஒரு கல்விச் சமூகம் உயர்ந்து விட முடியாது. மாறாக மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மூலம் சிறந்த பெறுபேறுகளை அடைதல் மூலமே ஒருகல்விநிறுவனமோ கல்லூரியோ தனது புகழை நிலைநாட்டிக் கொள்ள முடியும்.'

யாழ். இராமநாதன் கல்லூரியில்ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (GTZ) உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்புவிழா கடந்த வியாழக்கிழமை (28/9) கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வித் திணைக்களப் பொறியியலாளர் கு. வேபாலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்;

இந்நிகழ்வை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நாடாவை வெட்டி புதிய கட்டடத்தை திறந்து வைத்து ஆசியுரை வழங்கினார்.

பிரதம விருந்தினர் தனதுரையில்; மேலும் கூறியதாவது 'பிறநாட்டு நிறுவனம் ஒன்று எமது மக்களின் நலனில் அதிக அக்கறை கொண்டு செயற்படுவது இந்த இக்கட்டான நிலையில் ஆறுதலைத் தருகின்றது. வலிகாமம் கல்வி வலயத்தில் ஐந்து பாடசாலைகள் புனரமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்டபோது இராமநாதன் கல்லூரியும் அதனுள் அடங்கிக் கொண்டது.

பழைய கட்டடம் சேதமடைந்த நிலையில் இருந்தபோது அதனைப் புனரமைத்து மெருகூட்டி கல்விக்கு வளம் சேர்த்துள்ளார்கள் என்றார்.

கல்லூரி அதிபர் உட்பட பிரமுகர் பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர். (க-106)

# தேர்தல் வன்முறைகள் அதிகரிக்கலாம் கண்காணிப்பாளர் பெரிதும்அச்சம்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் கடுமையாக அதிகரிக்கலாம்என கண்காணிப்பாளர் அச்சம் வெளியிட்டுள்ளார்;

பொதுத்தேர்தலுக்கு இன்னமும் ஒருவாரமே இருக்கையில், தேர்தல் வன்முறைகள் வர வர அதிகரித்துச்செல்வது அமைதியான தேர்தலுக்கு வழிகோலாது எனவும் கண்காணிப்புக்குழுவினர் எச்சரித்துள்ளனர்.

தேர்தல்வன்முறைகளில் வடமேல் மாகாணம் முன்னணியில்உள்ளது.

கட்சிகளுக்கிடையிலான மோதல்களைவிட, விருப்பு வாக்குகளைப் பெறும்வகையில், ஒரேகட்சிக்கு உள்ளே மோதிவரும் சம்பவங்களும் அதிகரித்துவருகிறது.

இதைவிட, வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ்நிலையங்களில் பதிவுசெய்யும் முறைப்பாடுகள்பல உதாசீனம் செய்யப்படுவதாகவும், சிலமுறைப்பாடுகளை பதிவுசெய்ய பொலிஸ்நிலையங்கள் மறுத்துவருவதாகவும் தமக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (உ)

# 5460 வறியமாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியம் மூலம் உதவி

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர, பரீட்சையில் சித்திபெற்றும் உயர் கல்வி கற்க முடியாத வறிய குடும்பத்தைச் சேர்ந்த 5 60 மாணவர்களுக்கு ''சஹுச்சி,'' திட் ...வுள்ளனர்;

இது தொடர்பான சுற்று நிருபனம் நாட்டிலுள்ள சகல வலயக் கல்விபபணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. [வ-க-03]

### ஆலய புனரமைப்பு

(நல்லூர்)

ஊரெழு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம், புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை ஆலய நிர்வாக சபையினர் மேற்கொண்டுள்...

# முஸ்லிம்களின் படுகொலையில் சர்வதேச சக்திகள் உள்ளன

## பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழ் மக்களைப் பாதுகாக்க விடுதலைப்புலிகளும், சிங்களவர்களைப் பாதுகாக்க படையினரும் இருக்கின்றபோது முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இருக்கும் ஒரேஒரு லான ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸை அழிப்பதற்கான முயற்சிகளாக தலைவர் அஷ்ரஃப் அவர்களின் மரணத்தையும், என்மீதான படுகொலை முயற்சிகளையும் கருதுகின்றேன் இத்தகைய படுகொலைகளின் பின்னணியில் சர்வதேச சக்திகளுடன், தீயசக்திகளும் இணைந்துள்ளதாகத் தகவல்கள் கிடைக்கின்றன இவ்வாறுபடுகொலை முயற்சியிலிருந்துஉயிர்தப்பிய பின்; நடைபெற்ற முதலாவது தேசிய ஐக்கிய முன்ன... படிப்பினைகளைப் பெற்றுள்ளது இனிமேலும் திருந்தாமல், சிந்திக்காமல் முஸ்லிம் காங்கிரஸை நிராகரிக்க முற்பட்டால் அதைவிடப் பெரிய சமூகத்துரோகம் எதுவும் இருக்கமுடியாது.

என்னைப் படுகொலை செய்வதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸை அழிக்க முடியாது. தலைவர் மரணித்ததன் பின்னர் மீதமாயுள்ள தலைவர்களையும் அழித்துவிட பல சக்திகள் முனைப்பாகவுள்ளன.

எதிர் வரும் தேர்தல் மிக முக்கியமான தேர்தல்; முஸ்லிம்கள் ஒற்றுமைப்படுவதன் மூலமாக மாத்திரமே அடுத்த ஆட்சியைத் தெரிவுசெய்கின்ற பொறுப்பையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளும் என்றார்.

வர்களுக்கு ''சஹச்சி,'' திட்டத்தின் கீழ் ஜனாதிபதி நிதியத்தின் மூலம் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

3 ஆயிரம் ரூபாவிற்கு குறைந்த வருமான முடைய குடும்பத்தை சேர்ந்த மாணவர்க்கும், கல்வி அமைச்சின் மூலம் வேறுபுலமைப் பரிசில் நிதியம் பெறாத மாணவர்களுக்கும் மாதாந்தம் 240 ரூபா வீதம் 20 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளது:

நாட்டிலுள்ள 91 கல்வி நிலையங்களில் இருந்து தலா 60 மாணவர்கள் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது: [வ-க-03]

## ஈ. பி. டி. பி. உறுப்பினர் கைது

(யாழ்ப்பாணம்)

ஈ. பி. டி. பி. உறுப்பினர் மூவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீதிமன்றத்திற்கு அண்மையில் ஒலிபெருக்கியை இயக்கிய குற்றத்திற்காகவும், ஓட்டோவினுள் ஆயுதத்தை மறைத்து வைத்திருந்தமைக்காகவுமே இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது. (உ-12)

...னர்:

'10 லட்சம் ரூபா செலவில் 3 தள ராஜ கோபுரம், 2 லட்சம் ரூபாசெலவில் வசந்த மண்டபம், 5லட்சம் ரூபா செலவில் ஸ்தம்ப மண்டபம், 4 லட்சம் ரூபா செலவில் கோபுரமுன் மணிமண்டபம், என்பன புதிதாக அமைக்கப் பெற்று, ஏனைய திருத்த வேலைகள், வர்ணந்தீட்டுதல் என்பனவும் நிறைவேற்றப் பெறவுள்ளதாகவும், ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

[க-103]

வது தேசிய ஐக்கிய முன்னணியின்பிரச்சாரக்கூட்டத்தில் பேசிய பிரதியமைச்சரும், தேசிய ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட உபதலைவருமான எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

நேற்றுமாலை காத்தான்குடி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இவர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்:

தொடர்ந்து பேசியஅவர்'' முஸ்லிம் சமுகம் கடந்த 15 நாட்களுக்குள் மிகப்பெரிய

...கொள்ளும் என்றார்.

(க-60)

## புதியபஸ் தரிப்பு நிலையம்

(அரியாலை)


பருத்தித்துறை வீதியில் யாழ். மாநகர சபையின் அலுவலகத்திற்கு அண்மையில் புதிதாக பஸ் தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனால்பொது மக்கள் நன்மையடைந்துள்ளனர், (த-106)


கல்வித்துறை சிறப்புற

தரமும் வளங்களும் மேன்மேலும் அதிகரிக்க

கல்வித்துறைக்கு கடந்த காலத்தில் ஆற்றிய பணி

எதிர்காலத்திலும் தொடர எம்மை ஆதரித்திடுவீர்!



என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் + ஈரோஸ்)

(1689)

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## கணிதம் பகுதி I


நேரம் - 1 மணி

ஆக்கம்; யாழ்; சி. டி. பல்குணன்லாலா யா/மல்லாகம் ம. வி

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

01) ஒவ்வொன்றும் ரூ 35 விலையுள்ள 20 பூசணிக்காய்களை வாங்குவதற்கு ரவியிடம் உள்ள பணம் ரூ 7 குறைவாக இருந்தது. எனின் ரூ 11 விலையுள்ள எத்தனை தேங்காய்களை ரவி அந்தப் பணத்திற்கு வாங்கமுடியும்?


02) சுருக்குக: $\frac{7}{C-6} - \frac{8}{6-C}$




03) அருகேயுள்ள உருவில் 1, 3 என இலக்கமிடப் பட்ட பிரதேசங்கள் நிழற்றப்பட்டிருந்தால் அதனைத் தொடைக் குறியீட்டினால் தருக?

04) ரூ 12 இற்கு வாங்கப்பட்ட பொருள் ரூ 24 இற்கு விற்கப்பட்டால் சதவீத இலாபம் யாது?

05) $AB=12Cm$, $BC=5Cm$ $\hat{ABC}=90$ பாகை, $AD=DC$ எனின் BD இன் நீளம் யாது?




06) சுருக்குக: $1010_{இரண்டு} - 11_{இரண்டு}$

07) A, B என்பன இரு நிலையான புள்ளிகள் A, B என்பவற்றை மையங்களாகவுடைய சம வட்டங்கள் ஒன்றையொன்று வெட்டும் புள்ளிகளின் ஒழுக்கு யாது?

08) $2x+6$ இனதும், $x-7$ இனதும் கூட்டுத்தொகையை $4x-5$ இலிருந்து கழிக்க?

09) பேணி ஒன்றிலுள்ள பீற்றூட் விதைகள் முளைப்பதற்கான நிகழ்தகவு 84% எனின் அதிலுள்ள 150 விதைகளில் எத்தனை விதைகள் முளைக்குமென எதிர்பார்க்கலாம்?

10) I $214 \times 206$ என்பதை $(a+b)$, $(a-b)$ என்ற வடிவில் எழுதுக?
II $\sqrt{214 \times 206+16}$ இனை காரணியறிவால் சுருக்குக?

11) $9x^2 - 24x$ ஐ நிறை வர்க்கமாக்க கூட்ட வேண்டிய] மாறா உறுப்பினைக் காண்க?

12) $மட_{10} 5=0.699$ எனின் $மட_{10} 4$ இன் பெறுமதி காண்க?

13) 40 வயதுடைய ஒருவர் ஆயுட் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் கீழ் 15 ஆண்டு காலத்திற்கு காப்புறுதியாகும் போது ரூ 1000 காப்புறுதித் தொகைக்கு செலுத்த வேண்டிய ஆண்டுத் தவணைப் பணம் ரூ 30 எனின் ரூ 40 000 காப்புறுதித் தொகைக்கு செலுத்த வேண்டிய ஆண்டுத் தவணைப் பணம் எவ்வளவு,

14] △ABC இல் $\hat{A}$ $\hat{B}$ $\hat{C}$ என்பவற்றின் அளவுகள் முறையே 2 : 5 :3 என்ற விகிதத்தில் உள்ள முக்கோணத்தின் பக்கங்களை நீளங்களின் ஏறு வரிசையில் தருக?

15] சுருக்குக: $\left[\frac{8}{27}\right]^{\frac{1}{3}} \times \left[\frac{9}{4}\right]^{\frac{1}{2}}$

16] $Y=(x-5)^2 + 2$ என்ற வரைபின் திரும்பற்புள்ளி யாது?

17] ஒரு வகுப்பிலுள்ள 45 பிள்ளைகள் கணித பாடத்தில் ஈட்டிய புள்ளிகளின் இடையம் 30 ஆகும்.
(அ) 30 புள்ளிகளை ஈட்டியவன் கணிதபாடத்தில் எத்தனையாவது இடம்வகிக்கின்றான்
(ஆ) 30 இலும் குறைந்த புள்ளிகள் பெற்ற மாணவர் எத்தனை பேர்?

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ரெம்பர்மாதம் 28-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத்தரப்படுகிறது.

| | |
|---|---|
| 151298 பி | 161298 சி |
| 161298 டி | 161298 ஈ |
| 161298 எவ் | 161325 ஏ |
| 161325 பி | 161329 ஏ |
| 161329 பி | 161329 சி |
| 161335 ஏ | 161335 பி |
| 161335 சி | 161335 டி |
| 161366 ஏ | 161366 பி |
| 161366 சி | 161366 டி |
| 161366 ஈ | 161377 ஏ |
| 161384 ஏ | 161384 பி |
| 161384 சி | 161427 ஏ |
| 161427 பி | 161431 ஏ |
| 161431 பி | 163140 ஏ |
| 163146 ஏ | 163149 ஏ |
| 163149 பி | 163153 ஏ |
| 163153 பி | 163187 ஏ |
| 163188 பி | 163187 சி |
| 163188 டி | 163203 ஏ |
| 163205 ஏ | 163205 பி |
| 163207 ஏ | 163222 ஏ |
| 163222 பி | 163222 சி |
| 163222 டி | 163222 ஈ |
| 163222 எவ் | 163233 ஏ |
| 163233 பி | 163233 சி |
| 163254 ஏ | 163255 ஏ |
| 163255 பி | 163255 சி |
| 163255 டி | 163262 ஏ |
| 163273 ஏ | 163273 பி |
| 163308 ஏ | 163344 ஏ |
| 163364 ஏ | 163364 பி |
| 163372 ஏ | 163384 ஏ |
| 163413 ஏ | 163413 பி |
| 163437 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 157015 ஏ | 157190 ஏ |
| 159497 ஏ | 163344 பி |
| 163344 சி | 139126 ஏ |
| 147822 ஏ | 147822 பி |
| 154089 ஏ | 154089 பி |
| 156198 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 131817 ஏ | 144037 ஏ |
| 146386 ஏ | 146386 பி |
| 151547 ஏ | 151547 பி |
| 151547 சி | 156008 ஏ |
| 157718 ஏ | 157718 பி |
| 158743 ஏ | 158743 பி |
| 158750 ஏ | 158750 பி |
| 160843 ஏ | 161536 ஏ |
| 161549 ஏ | 161552 ஏ |
| 161557 ஏ | 161558 ஏ |
| 161558 பி | 161617 ஏ |
| 161969 ஏ | 161969 பி |
| 141045 ஏ | 1567630 ஏ |
| 142735 ஏ | 144499 ஏ |
| 144499 பி | 144499 சி |
| 144513 ஏ | 144513 பி |
| 144513 சி | 144513 டி |
| 144513 ஈ | 144513 எவ் |
| 144513 ஜி | 144543 ஏ |
| 144543 பி | 150121 ஏ |
| 150121 பி | 150121 சி |
| 150121 டி | 150121 ஈ |
| 150159 ஏ | 150159 பி |

| | |
|---|---|
| 154223 ஏ | 154223 பி |
| 155543 சி | 156249 ஏ |
| 156249 பி | 156283 ஏ |
| 156283 பி | 156342 ஏ |
| 156354 ஏ | 156354 பி |
| 156354 சி | 156354 டி |
| 156392 ஏ | 156449 ஏ |
| 156464 ஏ | 156477 ஏ |
| 156477 பி | 156477 சி |
| 156591 ஏ | 156591 பி |
| 156591 சி | 156591 டி |
| 156605 ஏ | 156606 பி |
| 156606 சி | 156632 ஏ |
| 156632 பி | 156634 ஏ |
| 156634 பி | 157045 ஏ |
| 159304 ஏ | 159304 பி |
| 159304 சி | 159327 ஏ |
| 159327 பி | 159342 பி |
| 159342 சி | 159343 ஏ |
| 159344 ஏ | 159415 சி |
| 159438 ஏ | 159451 ஏ |
| 159451 பி | 159482 ஏ |
| 161021 ஏ | 161021 பி |
| 161092 ஏ | 161092 பி |
| 161093 ஏ | 161093 பி |
| 161093 சி | 161093 டி |
| 161113 ஏ | 161113 பி |
| 161113 சி | 161248 ஏ |
| 161253 ஏ | 161253 பி |
| 161253 சி | 161253 டி |
| 161273 ஏ | 161273 பி |
| 161273 சி | 161273 டி |
| 161274 ஏ | 161274 பி |
| 161319 ஏ | 161314 பி |
| 161319 சி | 161319 டி |
| 161319 ஈ | 161319 எவ் |
| 161319 ஜி | 161344 ஏ |
| 161344 பி | 161387 ஏ |
| 161401 ஏ | 161401 பி |
| 163150 ஏ | 163150 பி |
| 163150 சி | 163152 ஏ |
| 163152 பி | 163156 ஏ |
| 163178 ஏ | 163217 ஏ |
| 163218 ஏ | 163220 ஏ |
| 163220 பி | 163220 சி |
| 163230 ஏ | 163230 பி |
| 163231 ஏ | 163231 பி |
| 163250 ஏ | 163250 பி |
| 163260 ஏ | 163260 பி |
| 163260 சி | 163281 ஏ |
| 163281 பி | 163299 ஏ |
| 163294 பி | 163309 ஏ |
| 163318 ஏ | 163318 பி |
| 163324 ஏ | 163324 பி |
| 163325 ஏ | 163325 பி |
| 163346 ஏ | 163371 ஏ |
| 163400 ஏ | 163417 ஏ |
| 163420 ஏ | 163420 பி |

### சண்டிலிப்பாய்


| | |
|---|---|
| 155261 ஏ | 155261 பி |
| 155261 சி | 155261 டி |
| 156053 ஏ | 158708 ஏ |
| 158708 பி | 158708 சி |
| 158708 டி | |
| 158708 ஈ | 158708 எவ் |
| 160438 ஏ | 160450 ஏ |
| 160450 பி | 160450 சி |
| 160450 டி | 160490 ஏ |
| 160490 பி | 160530 ஏ |
| 160530 பி | 160537 ஏ |
| 160537 பி | 160537 சி |
| 160714 ஏ | 160714 பி |

17] ஒரு வகுப்பிலுள்ள 45 பிள்ளைகள் கணித பாடத்தில் ஈட்டிய புள்ளிகளின் இடையம் 30 ஆகும்.

(அ) 30 புள்ளிகளை ஈட்டியவன் கணிதபாடத்தில் எத்தனையாவது இடம்வகிக்கின்றான்

(ஆ) 30 இலும் குறைந்த புள்ளிகள் பெற்ற மாணவர் எத்தனை பேர்?

18] அருகேயுள்ள உருவில் $A\hat{B}O = 45$ பாகை A (0,6) எனின் நேர் கோடு A B இன் சமன் பாட்டினை எழுது?




19] தொடரொன்றில் n ஆவது உறுப்பு 4n — 3ஆல் காட்டப் படுகிறது எனின், 2 ஆம் உறுப்புயாது?

(தொடரும்)

| | | | |
|---|---|---|---|
| [illegible] | 144543 ஏ | 160490 டி | 160490 ஏ |
| 144543 பி | 150121 ஏ | 160490 பி | 160530 ஏ |
| 150121 பி | 150121 சி | 160530 பி | 160537 ஏ |
| 150121 டி | 150121 ஈ | 160537 பி | 160537 சி |
| 150159 ஏ | 150159 பி | 160714 ஏ | 160714 பி |
| 150159 சி | 152315 ஏ | 161492 ஏ | 161492 பி |
| 152315 பி | 152413 ஏ | 161550 ஏ | 161550 பி |
| 152484 ஏ | 152484 பி | 161550 சி | 161550 டி |
| 152611 ஏ | 152611 ஏ | 161550 ஈ | 161580 ஏ |
| 152611 சி | 152729 பி | 161580 பி | 161620 ஏ |
| 152729 ஏ | 152798 ஏ | 161643 ஏ | 161643 பி |
| 152967 ஏ | 153056 ஏ | 161726 ஏ | 161726 பி |
| 153056 பி | 153056 சி | 161744 ஏ | 161744 பி |
| 153056 டி | 154130 ஏ | 161801 ஏ | 161941 ஏ |
| 154130 பி | 154131 ஏ | 161941 பி | 161941 சி |
| 154131 பி | 154159 ஏ | 161942 ஏ | 161951 ஏ |
| 154159 பி | 154159 சி | 161951 பி | 161971 ஏ |
| 154222 ஏ | 154222 பி | 168929 ஏ | 168929 பி |
| 154222 சி | 154222 டி | | |

(2 ஆம் பக்கம் பார்க்க)

மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்திற்காகவும் வாக்களிப்போம்!
தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்
சுயேச்சைக்குழு - 2



X
இ. சுபத்திரன் (றொபேட்)



அ. வரதராஜப் பெருமாள்
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
(ஈ. பி. ஆர். எல். எவ்)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# இயற்கை உனக்கு கற்றுத் தருவதன் மூலம் நீ வாழப்பழகு

இயற்கை பேசாமலே தரும் போதனைகள் பல. அவதூத குருவைப் போலத்திறந்த உள்ளத்தோடு கற்கும் பணிவோடு உலகைப்பார்த்தால் எங்கெங்கும் உபதேசங்கள் பெறலாம்.

நதியைப்பார்! அது பிரியோசனத்திற்காக உருவாகியுள்ளது. உயர்ந்த மலையில் பிறந்தாலும் தாழ்ந்து நிலத்துக்கு வந்து அனைவர்க்கும் பயன் தருகிறது.

கடல் முகிலாகி, மழையாகி நதியாகிறது. கடலினின்று எத்தனை நூறு காதங்களிற்கு அப்பால் அது நதியானாலும் தன் மூலத்தை மறவாமல் ஓடி ஓடி வந்து அதிலேயே கலந்து அது கடலாகிவிடுகிறது!

மலையைக் காண்கையில அதன் கம்பீரத்தையும் நிலையுறுதியையும் கண்டு பாடம் பெறு.

தாரகைகளைப் பார்க்கும் போது அவற்றில் சூரியனை விடவும் எவ்வளவோ பெரியனவாகப் பல இருந்தாலும் அவை ஒன்றுக்கொன்று மோதலின்றி கடவுள ஆணைக்கடங்கி விண் வீதியில் அவனை வலம் வரும் கட்டுப்பாட்டையும் பணிவையும் புரிந்துகொள்.

விண் வெளியைப்பார்! சகலத்தையும் தன்னுள் அடக்கியிருந்தாலும் அவை எதிலும் அது பட்டுக் கொள்ளாமல் எப்படி நிர்மலமாக இருக்கிறது.

கடலைப்பார் அதன் மாபெரும் பரப்பில் விழுந்த ஒரு துரும்பைக் கூட அது தன்னில் வைத்துக் கொள்ளாமல் கரைக்கு ஒதுக்கிறது. தனக்கென எது உரியதோ அதற்கதிகமான இம்மியும் சேர்த்துக் கொள்ளாமல் தனது தூய்மையை சர்வ ஜாக்கிரதையுடன் காத்துக் கொள்கிறது.

ஓர் எச்சில் இலையிலிருந்து கூட உப தேசம் பெறலாம். பிறர்க்குப் பயனாக அது அன்ன பட்சணங்கள் பரிமாறப் பட்டிருந்த வரையில் தனக்கு மதிப்புப் பெற்றுத்தரையில் சொஸ்தமாக இருந்தது. உண்பவர்கள் ஆசையுடன் அதனிடம் வந்து அமர்ந்தனர். அந்தப் பயன் தீர்ந்து இப்போது எச்சில் இலையான பின் அதன் கதியைப் பார்! காற்றடிக்கும் பக்கமெல்லாம் திண்டாடுகிறது. அதிலிருந்து எடுத்து உண்டவர்களே அது மேலேபட்டு விடப் போகிறதே என்று அருவருத்து ஒடுகிறார்கள்.

அறிவு அறுபது
ரா கணபதி

## தேர்தல் பணியில் பிக்குகள்

# ஐக்கிய தேசியக்கட்சியின் முடிவுக்கு பௌத்த அமைப்புகள் பலத்த கண்டனம்

(கொழும்பு)

பிக்குமார் தேர்தல் பணியில் ஈடுபடுவது உசிதமல்லவென பௌத்த அமைப்புகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் தேர்தலின் போது, பௌத்த பிக்குமாரை வாக்களிப்பு நிலைய முகவர்களாக நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துள்ள தீர்மானத்திற்கு பல்வேறு பௌத்த அமைப்புகளும் பலத்த கண்டனம் வெளியிட்டுள்ளன.

சங்கைக்குரிய பௌத்த பிக்குகளின் பணி தேர்தல் முகவர்களாக செயற்படுவதல்ல. மாறாக நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்படுத்த பௌத்த அகிம்சையைப் போதிப்பதே அவர்கள் பணியாகும்.

காவியுடைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பிக்குகள் சிலர் நடந்து கொள்வதாகவும் பௌத்த அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன. (உ)

## கொடுப்பனவுகள் வழங்கல்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான புரட்டாதி மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் புற்றுநோய், கசநோய் மற்றும் உதவிப் பணம் பெறுபவர்கள் அப்பகுதியிலுள்ள தபால், உப தபால் அலுவலகங்களில் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (த-23)

## தபால் பொதிகள்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிற்கான 867 தபால் பொதிகள் இன்று பருத்தித்துறைக்கு வரவிருக்கும் செஞ்சிலுவைச் சங்க கப்பல் மூலம் எடுத்துவரப் படவுள்ளன என யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-12

## மின்னிணைப்புக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் பத்தானையம் பதி அருள் மிகு ஸ்ரீ ஞான வைரவர் பெருமான் திருக்கோயிலுக்கு மின்னிணைப்புக்கான நிதி அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைத்தொகுதி ஈ.பி.டி.பியின் அமைப்பாளர் என். திரிலோகநாதனின் வேண்டுகோளின் பேரில் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்கே. வி.குகேந்திரன்கட்சி நிதியில் இருந்து இதற்கான பணத்தினை வழங்கியுள்ளார் என்று தெரிவிககப்படுகிறது. (த)

## துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பெண் பலி

(வடமராட்சி கிழக்கு)

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9. 25 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குடும்பப்பெண் ஒருவர் பலியானார்.

தர்மகுலசிங்கம் விக்னேஸ்வரி (வயது 46) என்ற மிருசுவில் தெற்கைச் சேர்ந்த பெண்மணியே மரணமானவராவார்.

மேலதிக விசாரணைகளின் பொருட்டு சடலம் மந்திகை மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ளது. (உ-43)

## நீர்வேலியில் சமய பாட பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிகாமாட்சியம்பாள் இந்து பரிபாலனசபை வருடா வருடம் பாடசாலை மாணவரிடையே நடத்திவந்த சமய பாடப் பரீட்சை இவ்வாண்டும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளிலிருந்தும் தனியார் கல்வி நிலையங்களிலிருந்தும் கோரப்படுவதாக மேற்படி சபைச் செயலாளர் த. பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார். (க)

## நவராத்திரி நாயகியை வலம்புரியில் வழிபடுவோம்



### நவராத்திரி விழா

முதல் மூன்று நாளடா வீரம் தரும் துர்க்கை தேவிக்கு
அடுத்து மூன்று நாளடா செல்வம்தரும் லட்சுமிதேவிக்கு
அடுத்து மூன்று நாளடா கல்விக்கரசி சரஸ்வதி தேவிக்கு
அடுத்து வரும்பத்தாம் நாளடா விஜயதசமிவிழாவடா.

பா. ஹரிசக்தி தரம்-2
யா/உடுவில் மகளிர் கல்லூரி

* * *

### காத்திருக்கிறோம் அம்மா...!

நாவினிலே நடனமிடும் நர்த்தகியே வித்தகியே
நான் மறையோர் உனைத் துதிக்க நானிலத்தார் வாழ்த்த
வீணாதரி நிந்தன் வித்தைகள் மேலோங்க
வீறு நடை போடும் விடியலுக்காய் காத்திருப்போம்.

அ. துவாரகா தரம்-8A
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

* * *

### நலந்தருவாய் வாகீஸ்வரியே

நவராத் திரியின் நவமணியே
நலம் பல தரும் ஸ்ரீ வாகீஸ்வரியே
புவன மெங்கும் புட்கரத்தில்
புன்னகைக்கும் புவனேஸ்வரியே
பாவ வினை அகல பார்வதியே-உனை
பாடித் துதிக்கின்றோம் வலம்புரியில்
அவனியிலே அல்லல்கள் தீர
அம்பிகையே அருள் புரிவாய்.

எம். வாசுகி
உயர்தரம் (கலைப்பிரிவு)
யா/இராமநாதன் கல்லூரி

* * *

### நாமுய்ய நலமருள்வாய்

சரஸ்வதியே தாயே சாந்தமான வாழ்வளிப்பாய்
பரஸ்பரமாய் நாங்கள் பண்புமிக்க கல்வி பெற
கரமதனைக் கொண்டு கலைகள் வளர்ப்பாயே
நரம்பினிலே சுருதி மீட்டி நாமுய்ய நலமருள்வாய்.

த. கிரிஜா
க. பொ. த. (உயர்தரம்)
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

* * *

### சக்தியின் மகிமை

சக்தியின் மகிமையடா ஒன்பது ராத்திரியில்
வீரத்தின் திறமையடா அன்னை துர்க்கைக்கு
செல்வத்தின சிறப்பதடா தேவி இலக்குமிக்கு
கல்வியின் புகழதடா கலைமகள் சரஸ்வதிக்கு

சி. பராசக்திநாதன்
தரம் - 7 D
யா/ பரி. யோவான் கல்லூரி

யைப் போதிப்பதே அவர்கள் பணியாகும்.

அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (த-23)


மேற்படி சபைச் செயலாளர் த. பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார். (க)

தரம் - 7 D
யா/ பரி. யோவான் கல்லூரி


## ஜனநாயக இடதுசாரி முன்னணி

ஹண்டி பேரினபநாயகம முதல் கைலாசபதி வரை புகட்டி வளர்த்த
பழமைவாதத்துக்கு அடிபணியாத கல்வியியல் சமூக சிந்தனைகளை
மேலும் முன்னெடுக்க

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் முதல் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன
இயக்கம் என தொடரும் மக்கள் போராட்ட அரசியல் மார்க்கத்தை
மேலும் முன்னெடுக்க




(1797) மக்கள் கருத்தைப் பலப்படுத்த வாக்களிப்போம்.



## சுயேச்சை குழு இல-3 (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி)

மக்கள் அலை திசை திரும்பி விட்டது!...
ஒரு வாரத்தில் மாபெரும் புரட்சி!...
மக்கள் அலை அலையாக எம்பக்கம் வருகின்றனர்!...

வெற்றி நமதே!...
ஆம்! வெற்றி சந்திரிகாவுக்கே!...



முதன்மை வேட்பாளர்
**வேல்முருகு தங்கராசா**

உங்கள் வாக்கைத் தொலைபேசிக்கே தந்திடுங்கள்

(ச-850)

## பீஹாரில் இடதுசாரிகள் மோதல் 9 பேர் கொலை; 80 பேர் காயம்

(பட்னா)
பீஹாரில் இரு கம்யூனிஸ்டு குழுக்களுக் கிடையில நடை பெற்ற மோதலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த மாநிலத்தில் பட்னா விற்கு அருகே உள்ள சில கிராமங்களில் இந்த மோதல் தொடர்கின்றன.

துத்துவாள், கத்தி, துவக்கு சகிதம் மாக்ஜியிஸ் கம்யூனிஸ் கட்சியினரும் மாற்றுக் கட்சி ஒன்றும் மோதுவதால் பல உயிர்கள் போயிருக்கின்றன வென்றும் இதுவரை 9 பேர் கொலை செய்யப்பட்டுள்ள தாகவும் பல நூற்றுக் கணக் கானோருக்கு காயம் ஏற்பட் டிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

பதற்ற நிலையை தணிப் பதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுவருவதாகவும் தெரி விக்கப்படுகிறது. (து)

## ஈராக்மீதான தடையைநீக்க அராபியநாடுகள் முன்வரவேண்டும்

### - சிரிய அதிபர் அறைகூவல்

(டமஸ்கஸ்)
ஈராக்நாடுமீது பன்னாட்டு அரசு விதித்ததண்டனைத் தடையை முறியடிக்க அரா பியநாடுகள் தலைமையேற் றுப்பிரசாரம் செய்யவேண் டுமென சிரியஅதிபர் பஸார் அஸாத் கருத்துவெளியிட்டுள் ளார்.

கடந்த 10 வருடங்களின் முன், குவைத்மீது ஈராக் ஆக்கிரமிப்புச் செய்ததை யடுத்து, அந்நாடுமீது பன் னாட்டுஅரசு பொருளாதா ரத்தடைவிதித்தது.

இருப்பினும், பலவருடங் களாக ஈராக்மீது அமுலில் இருக்கும் தடைத்திட்டம் மறுபரிசிலனை செய்யவேண் டுமென சிரிய அதிபர் கோரிக்கை விடுத்திருப்பது பெரும் வியப்புக்குரிய விடய மென பலரும் விமர்சித்துள் ளனர்.

ஏனெனில், குவைத்தில் இருந்து ஈராக்கை வெளியேற் றுவதற்காக அமெரிக்கா தலைமையில்நிகழ்ந்த இரா ணுவ நடவடிக்கைக்கு சிரியா ஆதரவளித்தமை தெரிந் ததே.

இதேவேளை,

ஈராக் அரசைத் தண்டிப் பதே முதலில் எமதுநோக்க மாக இருந்தபோதும் தொட ரும் பொருளாதாரத் தடை களால் ஈராக்நாடு அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டுள் ளதால் தனது நிலைப்பாட் டில் மாற்றம்ஏற்பட்டிருப்ப தாக சிரியஅதிபர் விளக்க மளித்துள்ளார்.

அமெரிக்க, பிரிட்டன்நாடு களின் கோரிக்கையையும்மீறி ரஷ்யா, பிரான்ஸ், ஜோர் தான்நாடுகள் ஈராக் தலை நகர் பக்தாத்திற்கு விமான மூலம் நிவாரணஉதவிகள் வழங்கிய ஒருவாரத்திற்குள் சிரியாவின் அறிவிப்பு வெளி யாகியிருப்பது குறிப்பிடத் தக்கது. (உ)

## இந்தியா வந்த ரஷ்ய அதிபருக்கு செங்கம்பள வரவேற்பாம்

### பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு

(புதுடில்லி)
ரஷ்ய அதிபர் விளாடி மிர்புட்டின் நேற்றுமுன்தினம் புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் வந்து இறங்கி னார்.

அவருக்கு செங்கம்பள வர வேற்பு அளிக்கப்பட்டது. இந்திய வெளியுறவு அமைச் சர் ஜஸ்வந்சிங் உட்பட பல மந்திரிகளும் உயர் அதிகாரி களும் ரஷ்ய அதிபரை வர வேற்றனர்.

புதுடில்லி வந்திறங்கிய புட் டின் நேரடியாக பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து உத்தி யோகப் பற்றற்ற முறையில் பேச்சுக்களை நடத்தினார்.

கடந்த 7 வருடங்களுக்குப் பிறகு ஒரு ரஷ்யத் தலைவர் இந்தியா வருவது இதுவே முதற் தடவை.

இருதரப்புத் தலைவர்களுக் கிடையேயும் பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடை பெற்று வருகின்றன.

குறிப்பாகபாதுகாப்பு அணு ஆயுதம் விமான சேவை போன்றவற்றில் பேச்சுவார்த் தைகள் தொடர்கின்றன வென்றும் இது போன்ற வற் றில் 10 ஒப்பந்தங்கள் கைச் சாத்திட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதியை பதவி விலகக்கோரி எதிர்க் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

### யூகோஸ்லாவியாவில் சம்பவம்

(இலண்டன்)
யூகோஸ்லாவியா விலிருக் கும் அதிபர் கிலோபோடன்

### உலக தரிசனம்

மிலோசெவிக்கைப் பதவி வில கக்கோரி எதிர் கட்சியினர் ஆர்ப்பாட்டமறியல்போராட் டங்களை நடத்தினர்.

பெல்கிரேட் உட்பட ஏனைய நகரங்கள் யாவும் ஆர்ப்பாட்ட கதவடைப்பில் ஈடுபட்டிருந்ததால் நாட்டில் ஸ்தம்பித நிலை ஏற்பட்டது.

கடந்த வாரம் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர் கொட் சிறிக்கை பதவி ஏற்க விடும் படியும் உடனடியாக பதவி யிலிருக்கும் யூகோஸ்லாவிய அதிபரை பதவி விலகும்படி யும் ஆர்ப்பாட்டக் கதவ டைப்புகள் இடம் பெற்றன.

இந்த ஆர்ப்பாட்டக் கத வடைப்பில் மின்சார ஊழி யர்கள் முழுமையாகப் பங்கு கொண்டதினால் நாடே ஸ்தம்பித நிலை அடைந் திருக்கிறது.

இதற்கிடையே யூகோஸ் லாவியா இறுதி நிலை குறித்து ரஷ்ய அதிபர் விளாடிமீர் புட்டினும் அமெரிக்க அதிபர் கிளிண்டனும் சந்தித்து உரை யாடியுள்ளார்கள். (து)

## மத்திய கிழக்கில் தொடரும் பதற்றம் பாதுகாப்பு சபை கூட்டம் விரைவில்

(வாஷிங்டன்)
பாலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியத் துருப்பினருக் கும் இடையேயான கலகங்க ளினால் ஏற்பட்ட மோசமான நிலையை சமாளிக்கும் விதத் தில் மத்திய கிழக்கின் நில மையை ஆராய ஐ. நா. பாதுகாப்புச்சபை விசேட கூட்டம் ஒன்றை நடத்தியுள் ளது.

கிழக்கு ஜெருசலேமில் உள்ள பள்ளிவாசல் ஒன்றிற்கு இஸ்ரேலியத் தலைவர் ஒரு வர் விஜயம் செய்ததை முன் னிட்டு ஏற்பட்ட கலவரத்தில் இதுவரை 51 பேர் பலியாகி யுள்ளமை தெரிந்ததே.

### பங்களாதேஷ்ஆடைத்தொழிற்சாலைகளில்

## பெருமளவினர் பாலியல்வல்லுறவில் ஈடுபடுத்தப்படுகின்றனராம்

### அறிக்கைகள் விபரங்கள் தெரிவிப்பு

(டாக்கா)
பங்களாதேஷில் ஆடைத் தொழிற் சாலைகளில்வேலை புரியும் 15 இலட்சம் பெண் கள்பாலியல்வல்லுறவினாலும் குறைந்தசம்பளத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார் களென்று அறிக்கைகள் தெரி விக்கின்றன.

ஆடைத் தொழிற்சாலை களில் பெண்களே கூடுதலாக வேலை செய்கிறார்களென் றும் குறைந்த சம்பளத்தில் அவர்களை வேலைக் கமர்த்துகிறார்களென் றும் ஏழைப் பெண்களை பாலியல் வல்லுறவுகளுக்கு உட்படுத்துகிறார்களென் றும் அந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சுமார் 6 ஆயிரம் பெண் கள் பாலியலால் துன்புறுத் தப்பட்டிருக்கிறார்களென்றும் தேசிய ஆடைத் தொழிற் சாலை ஊழியர் சம்மே ளனத்தின் பொதுச் செயலா ளர் தெரிவித்தார். (து)

## துர்க்கா பூசையை கொண்டாடுவோர் கொலை செய்யப்படுவார்கள்

### தேசிய விடுதலை முன்னணி எச்சரிக்கை

(புதுடில்லி)
இந்தியாவின் வட- கிழக்கு மாநிலமான திரிபுராவில் இயங்கும் பிரதான பிரிவி னைவாத அமைப்பொன்று, இந்துப் பண்டிகையான துர்க்கா பூசையை கொண் டாடுவதில் இருந்து இந்து பழங்குடி மககள் விலக வேண்டும் என ஆணை பிறப் பித்துள்ளது.

திரிபுராவில் இயங்கும் தேசிய விடுதலை முன்ன ணியே இக் கடும் ஆணை யைப் பிறப்பித்துள்ளது.

தமது கட்டளையை மீற வோர் கொல்லப்படுவர் என வும் இவ்வமைப்பு மேலும் எச்சரித்துள்ளது.

இதேசமயம்,

பழங்குடியினர் அனைவ ரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவ வேண்டும் எனவும் அவர்களுக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது. (உ)

வாஜ்பாயைச் சந்தித்து உத்தி யோகப் பற்றற்ற முறையில்

றில் 10 ஒப்பந்தங்கள் கைச் சாத்திட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துர்க்கா பூசையை கொண் டாடுவதில் இருந்து இந்து பழங்குடி மக்கள் விலக

யைப் பிறப்பித்துள்ளது.

தமது சட்டளையை மீற வோர் கொல்லப்படுவர் என

அவர்களுக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது. (உ)




# பாராளுமன்றத் தேர்தல்

யாழ்.மாவட்டம் 10-10-2000

தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட, தந்தையின் இலட்சியம் வென்றிட, தந்திடுவோம் எம் பொன்னான வாக்குகளை உதயசூரியனுக்கே!

## தமிழர் விடுதலைக் கூட்டணி

X

(சி-818)






சுரேஸ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்களை வதைக்கும் யுத்தத்தையும் அவசரகாலச் சட்டத்தையும் இல்லாதொழிக்க தோடம்பழச் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

## சுயேச்சைக் குழு-1

X



தர்மராஜா வலசன்

இல. 7

(சி-827) ஈ. பி. ஆர். எல். எவ். சுரேஷ் தலைமை

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

கல்லா ஒருவன் தகைமை
தலைப்பெய்து சொல்
லாடச் சோர்வு படும்.

- குறள் -

# வலம்புரி

## படிப்பினையாக அமையட்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழர்களின் பெருஞ் சொத்து. அங்கு கற்கும் மாணவர்கள் அனைவரும் உடன்பிறப்புக்கள், நம் தமிழ் மண்ணில் பிறந்தவர்கள்அங்கு கடமையாற்றும்விரிவுரையாளர்களும் இதற்கு விலக்கல்ல.

ஆனால்உலகின் ஏனைய பல்கலைக்கழகங்கள் அப்படியல்ல அங்கு பல நாடுகளில் இருந்தும் கல்வி கற்றும் வரும் பல்லின மாணவர்கள். விரிவுரையாளர்கள், விலைக்கு வாங்கப்பட்ட கலாசாரங்கள் என்று அங்கு நிலைமைகள் மாறுபட்டதாகக் காணப்படும்.

இதற்கெல்லாம்யாழ் பல்கலைக்கழகம் விதிவிலக்கானது. ஓர் இனம் ஓர் மொழி ஒருமித்த பண்பாடு, உடன்பிறப்புக்கள் உறவினர், இப்படியான ஒருகுடும்ப உறவை இங்கு காணமுடியும் இங்குகல்வி கற்கும் வாய்ப்பு கிடைப்பதை பெரும் பேறாகவே கருதவேண்டும்.

ஆனால் நிலைமை அப்படியல்ல. அதற்குமாறாக அண்மைக் காலங்களில் விரும்பத்தகாத. வேதனைக்குரிய விடயங்கள் நடந்தேறியுள்ளது. 'ராக்கிங்' என்ற போர்வையில் நடத்தப்படும் துன்புறுத்தல்கள், இம்சைகளால் கல்விச் சமூகம் வேதனை கொண்டுள்ளது. உயர் நிலைக்குவர முயற்சித்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற பின்பு 'ராக்கிங்' என்றகொடூரம் மாணவர்களின் உடல் உளபாதிப்புகளை ஏற்படுத்து மாயின் அதனை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

# இலங்கையின் பதினோராவது தேர்தலும்

# யாழ். குடாநாட்டு வேட்பாளர்களும்

இலங்கையின் பதினோராவது நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் பத்தாம் திகதி நடைபெற இருக்கின்றது. தேர்தலுக்கான பிரச்சாரங்களும், அதனோடு ஒட்டிய வன்முறைகளும், ஒருவர் மீது ஒருவர் சேற்றை அள்ளிப் பூசுவதும் தென் இலங்கை அரசியலில் மலிந்தும்; தொடர்ந்தும் காணப்படுவது சர்வசாதாரணமான காரியமாகிவிட்டது. கடந்த கால தேர்தல்களை எடுத்துக் கொண்டால்; ஜனநாயக மரபுக்கேற்ப தனி மனிதனுக்கு வாக்குச்சீட்டு என்பது எதற்கு, என்பதுபோல துஷ்பிரயோகமான தேர்தலே நடத்தப்பட்டன. காரணம், தெற்கிலுள்ளவர்கள் எல்லாவற்றிலும் சுதந்திரம் அடைந்தவர்கள் ஆனால் இலங்கை வாழ் தமிழனைப் பொறுத்த வரையில் வாழ்வியலில் வாய் திறப்பதற்கே சுதந்திரம் இல்லாதவன் இந்த வடிவில் எதிர்வரும் 10 ந் திகதி நடைபெறப்போகும் தேர்தலுக்கான கட்டியங்களாக ஒருகுழு இன்னொரு குழுவைத்தாக்குவதும், 'அவன் கிடந்தான் குடிகாரன் எனக் கொன்று ஊத்து' என்பதாக அவர் மீது இவரும், இவர் மீது அவருமாக அறிக்கைகள் விடுவதும், பிரசுரங்கள் விநியோகிப்பதும், சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர்கள் போல் யாழ். குடா நாட்டில் கர்ச்சிக்கின்றார்கள்.

சுகபோகத்தை அனுபவிப்பவர்களும், அனுபவிக்க முயற்சிப்பவர்களுமே இத் தேர்தலை ஒரு வரப்பிரசாதமாக கொள்வார்கள் ஆனால் இங்குள்ள மக்கள் வீடிழந்து, வாசலிழந்து, உண்ண, உறங்க இடமின்றி உப்புச் சிரட்டைக்கும் வழியின்றி அல்லற்படும் இவ் வேளையில் கூதல் காய, கூனிக்குறுகி நிற்கும் மக்களின் வரண்டு போன வாக்கா உங்களுக்குத் தேவையாய் இருக்கின்றது என மக்கள் விழிக்கின்றார்கள்;

### வீண் கோஷங்கள்

யுத்தத்தை நிறுத்து, தேர்தலை நிறுத்து, தமிழ் மக்களைக் கொல்லாதே தென் மராட்சியில் மக்களின் உடமைகளை அழித்து குண்டுகளால் குளம் வெட்டாதே என ஒன்று சேர்ந்து அரசைக் கோர முடியவில்லை. இந்த

எதிர் வரும் பத்தாம் திகதிக்குப் பின்பு அழிந்த உயிர்கள், உடமைகள் பிரிந்த உறவுகள் எல்லாம் ஒன்று சேரும் எனக் கூறுகிறீர்களே? உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்தீர்களா? அவலை நினைத்து உரலை இடிக்கிறீர்கள் இது நியாயமா? என தொடரும் யுத்தத்தால் இடம் பெயர்ந்து இன்னல்படும் சகோதரங்கள் மௌனத்

### சங்குநாதம்

தால் கேட்கிறார்கள் தென்னிலங்கை அரசும் தமிழனை அழித்தே ஒழிப்பேன் என கங்கணம் கட்டி நிற்கிறது.

இந்த நிலையில் ஒற்றுமை என்பது அறவே இல்லாது பல்வேறு துருவங்களாக நின்று சிங்களக் கட்சிகளின் கைப்பொம்மையாகப் பிரிந்து அம்பாறை, திருகோணமலை போன்று பிரதிநிதித்துவத்தை இழந்துள்ள நிலை மாதிரி நாளை யாழ். குடாநாட்டையும் சிங்க உரிமை (சிஹல உறுமய) கட்சிக்கு தாரை வார்த்துக் கொடுக்கும் நிலை ஏற்படலாம். தெற்கில் தேர்தல் பூச்சாண்டி காட்ட வடக்கில் தேர்தலில் நின்று காட்டமுற்படும்சிறுமைத்தனமும், கையாலாகாத்தனமும் உங்களின் ஒற்றுமையீனமுமே சிங்க உரிமைக் கட்சி யாழ் குடாநாட்டில் தேர்தல் களத்தில் நிற்கின்றது: அந்தக் கட்சியின் முன்னணி அமைப்பாளரில் ஒருவரான அத்துரலியே- இரத்தின ஸ்ரீதேரர் சரித்திரம் புரியாமல் மகாவம்சத்தில் புனையப் பட்ட புதுக்கதையை வைத்துக் கொண்டு இலங்கை சிங்களவருக்கே உரியது என புதுச் சரித்திரம் படைக்கின்றார், இவையெல்லாம் பதவியும், பட்டங்களும் சுகபோக வாழ்வையும் நினைத்து மக்களின் இன்னலை நினையா மாந்தரால் வரும் கெடுதியென மக்களின் உள்ளம் குமுறுகிறது எனலாம்;

### தேர்தல் உத்தி

ஒரு புறம் தேர்தல் மூச்சு மறுபுறம் யுத்த மூச்சு இவை

இரண்டும் அரசுக்கு இன்றியமையாதவையாக இருக்கின்றன. நடைபெறப்போகும் தேர்தலில் பொ ஐ ஐ முன்னணி வெற்றி பெறவேண்டும். தவறின் மற்றைய கட்சிகளின் நிலையைவிட இரட்டிப்பான சிக்கல்கள் இதற்கு ஏற்படும். பொ ஐ.ஐ முன்னணி தோல்வியைத் தழுவுமாக இருந்தால் சந்திரிகா அம்மையாரின் ஜனாதிபதிப் பதவியும் பல வீனமுற்றதாகி விடும். அத்தோடு நாடாளுமன்றம் இன்னொரு கட்சியின் பிடியிலும்; ஜனாதிபதி வேறு கட்சியாகவும் சர்வ அதிகாரம் கொண்டவராக விளங்கினாலும் தீர்மானங்களின் முடிவு இக்கட்டான ஒருநிலையையே தோற்றுவிக்கும் இதனால் எந்த வகையிலும் வெற்றி பெற வேண்டிய நிலை பொ. ஐ ஐ. முன்னணிக்கு உண்டு. இதனால் இத் தேர்தலில் பல சகாஸங்கள் இடம்பெற வாய்ப்புண்டு.

ஜனாதிபதித் தேர்தல் பெரும்பாலும் இருவருக்கிடையேயான போட்டியாக கொள்ளலாம். இதனால் ஒரு கட்சியை எதிர் கொள்ளவும், அவர்களின் பிரசாரங்களை முறியடிப்பதும் இலேசாக இருக்கலாம் நாடாளுமன்ற தேர்தலில் பல கட்சிகளின் எதிர்ப்பை சமாளிக்க வேண்டிய நிலை பொ.ஐ.ஐ. முன்னணிக்குண்டு;

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் தனதும், கட்சியினதும் செல்வாக்கைப் பலப்படுத்தவும் இந்தியா, நோர்வே போன்ற பிற நாடுகளுக்குஇனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை தன்னாலியன்றளவு கையாண்டதாக விளங்க வைககவும்,தமிழ்க்கட்சிகளை தான் கீறிய கோட்டுக்குள் தொடர்ந்தும் சிக்க வைப்பதற்கும், தமிழ் மக்களை ஏமாற்றும் தீர்வை நாடாளுமன்றில் சமர்ப்பித்து தோல்வியை தழுவியது மட்டுமல்ல, இலங்கையின் அரசியலில் அதிக செல்வாக்கைப் பெற்றிருக்கும் பௌத்த பிக்குமார்களினதும், பேரினவாதிகளினதும்

எதிர்க் கட்சியினதும் எதிர்ப்பைத் தேடிக் கொண்டார்.

இன்று பொ. ஐ ஐ முன்னணி எவ்வாறு தேர்தலில் வெற்றியைப் பெற்றுக்கொள்ளலாம் இதற்கு எந்த சடுதுடு முறையைக் கையாளலாம் எனச் சிந்தித்து செயற்படும் ஒரு செயற்பாடாகவே இரத்தின ஸ்ரீ விக்கிரமநாயக்கா பன்னிரெண்டாவது பிரதமராகவும் எஸ். பி. திஸாநாயக்கா ஸ்ரீ.ல.சு கட்சியின் செயலாளா பதவிக்கும் நியமிக்கப்பட்டதாகும். இரத்தினஸ்ரீ - விக்கிரமநாயக்கா கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவராக இருந்தாலும் அவரை விட அதி மூத்த உறுப்பினரான லக்ஷ்மன் - ஜெயக்கொடி போன்றோருக்கே பிரதமர் பதவி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் மென்மைப் போக்குடையவர் ஜெயக்கொடி என்பதால், புதிய பிரதமர் பௌத்தவாதி

## சிரபுரத்தான்

யும் இன நோக்குடையவரென்பதாலும், தேர்தலில் வெற்றியை தட்டிக் கொள்ள வேண்டுமென்பதாலும் பிரதமராய் இரத்தினஸ்ரீ நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரும் பதவிக்கு வந்தவுடன் பௌத்த தேரர்களின் ஆலோசனையின் பிரகாரமே தமிழருக்குரிய தீர்வு சாத்தியபபடும் என்றும், தேர்தல் நடைபெறும் தினத்துக்கு முன்பதாக விடுதலைப்புலிகளிடம் இழந்த ஆனையிறவு உட்பட மற்றைய பகுதிகளும் மீட்கப்பட்டுவ்டும் என ஆருடம் கூறியுள்ளார். தேர்தல் மூச்சின் வேகமும், பதவியின் ரசனையும் நடை பெற முடியாத விடயங்களை நடத்துவோம் எனக் கூறலாம். ஆனால் சிங்கள மக்களையே ஏமாற்றும் தன்மையாகவே இதுபடும். அத்துடன் இத்தேர்தல் தான் சந்திரிகா அரசு சமர்ப்பித்த தீர்வுத் திட்டத்தை இனிமேல் தொடர்வதா, இல்லைக் கைவிடுவதா என்பதையும் தீர்மானிக்கப் போகின்றது.

# இலங்கை இனவிவகாரத்தை

களின் உடல் உளபாதிப்பு களை ஏற்படுத்து மாயின் அதனை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

எனினும் யாழ். பல்க லைக்கழக நிர்வாகம் இது விடயத்தில் பொறுமை யோடும்- நிதானத்துட னும்- மனித நேயத்துட னும் நடந்துகொண்டது.

இந் நல்ல செயலினை மாணவர்கள்பலவீனமாக எண்ணியதால் 'ராக்கிங்' கொடூரம் விஸ்வரூபம் எடுத்து வைத்திய சாலை வரை கொண்டு சென்றது.

இனி மேலும் பொறுத் தால் நிலைமை மோச மாகி விடும் என்பதால் ராக்கிங்கில் ஈடுபட்டஆறு மாணவர்களை மூன்று மாத காலம் வரை வளா கத்திற்குள் நுழையக்கூடா தெனபல்கலைக்கழக நிர் வாகம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தென்னிலங்கைப் பல் கலைக்கழகங்களில் இது வழமையான நிகழ்வாக இருப்பினும். நமக்கு இது பரபரப்பான- பலரும் கண்டிக்கத் தக்கதான நிகழ்வு என்பதை மறுப்ப தற்கில்லை.

ஆறு மாணவர்களும் மூன்று மாதங்கள் நிறை வடைய மீண்டும் பல் கலைக்கழகவிரிவுரைக்குச் செல்ல முடியும். ஆனால் அம் மாணவர்களுக்கும். அவர்களின் பெற்றோர் களிற்கும் இத் தடை உத் தரவு மன வேதனையை கொடுக்கும் என்பதில் எந் தச் சந்தேகமும் இல்லை.

அத்துடன் குறித்த மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்தில் இது ஒரு மறுவாக அமையப் போவதும் உளரீதியான உண்மை. இந் நிலைஇனி யும் தொடராமல் இருப் பதற்கு இத் தடை உத்த ரவு ஏனைய மாணவர் களுக்கும் ஒரு படிப்பினை யாக அமைவதுடன் பெற் றோர்களையும் தங்கள் பிள்ளைகளின் செயற் பாட்டில் விழிப்படையச் செய்யட்டும்.

---

மராட்சியில் மக்களின் உடமைகளை அழித்து குண் டுகளால் குளம் வெட்டாதே என ஒன்று சேர்ந்து அரசைக் கோர முடியவில்லை. இந்த ஏதிரித் தமிழனை கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும்

---

# இலங்கை இனவிவகாரத்தை அரசியல் ஆயுதமாக பயன்படுத்தும் உயர் மட்ட அரச குழாம்

## அமெரிக்க நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைஇன நெருக்கடியை தமது அதிகாரப் போட்டிக் கான களமாக, சமூகத்தின் உயர்ந்த குழாம் பயன்படுத்தி வருகிறது.

இதனாலேயே இனப்பிரச் சினைக்கான தீர்வு காணப் படாமல் இழுத்தடித்துச் செல்லப்படுகிறது.

சமாதானம் தொடர்பாக அமெரிக்க நிறுவனம் ஒன்று மேற் கொண்ட ஆய்வறிக்கை யில் இவ்வாறு குறிப்பிடப்பட் டுள்ளது.

அவ் ஆய்வறிக்கை மேலும் தெரிவிப்பதாவது,

இந்த இனப் பிரச்சினையை சாதாரண மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று தீர்வு காண வேண்டும்.

மதம், இனம், என்ப வற்றை தமது சுயலாபம் கரு தும் உள்நோக்கங்களுக்காக சமூகத்தின் உயர் மட்டத்தி னர் பயன்படுத்துகின்றனர்.

இலங்கையில் தொடரும் இனப்பிரச்சினையின் ஒரு பகுதியாக விளங்கும் இவர் களே பிரச்சினையைப் பெரிது படுத்தி, தொடர வழி வகை செய்கின்றனர்.

உண்மையில், பிரச்சினை யைத் தீர்க்க வேண்டியவர் களும் அதற்குரிய வழி வகை களைக் கூற வேண்டியவர் களும் யுத்தத்தின் கொடூரத் தினால் பாதிப்புற்றிருக்கும் சாதாரண குடிமக்களே என வும் அவ் ஆய்வறிக்கையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

# நாளை ஓய்வூதிய கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

ஒக்டோபர் மாதக் கொடுப் பனவு நாளை 5 ஆம் திகதி யிலிருந்து ஆரம்பமாகும். வழமையான நடைமுறைப் படி பற்றுச் சீட்டுக்கள் தபால் மூலம் ஓய்வூதியர்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன; ஆனால் தற்போதைய யுத்த சூழ்நிலை காரணமாக எமது ஓய்வூதியர்களில் பலர் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வசிக்கிறார்கள்;

எனவே வழமையான முறைப்படி தபாலில் இடப் பட்டால் ஓய்வூதியப் பற்றுச் சீட்டுக்கள் ஓய்வூதியர்களைச் சென்றடைவதில் தடங்கலும் தாமதமும்ஏற்பட இடமுண்டு.

இதனை,கருத்திற் கொண்டு ஒக்டோபர் மாதத்திற்கான பற்றுச் சீட்டுக்களை சம்பந் தப்பட்ட வங்கிகளில் வைத்து வழங்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது.

ஓய்வூதியர்கள் தங்கள் வங்கி களுக்குச் சென்று ஓய்வூதிய அட்டை, தேசிய அடையாள அட்டை முதலியவற்றைக் காண்பித்து பற்றுச் சீட்டைப் பெற்று பூரணப்படுத்தி தமது ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

## விளையாட்டுச் செய்தி

# மினி உலகக் கிண்ண கிறிக்கெட்

நைரோபியில் நேற்று ஆரம்பமான மினி உலகக் கிண்ண கிறிக்கெட் போட்டியில் இந்தியா கென்யா அணிகள் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கென்யா அணி 50 ஓவர்களில் 9 விக்கற்றுக்களை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த இந்திய அணி இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை 23 ஓவர்களில் ஒரு விக்கற்றை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

(ந-4)

# தடங்கலின்றி வாக்காளர் அட்டை விநியோகம்

(வவுனியா)

வவுனியாவில் வாக்காளர் அட்டை விநியோகம் எதுவித தடங்கலுமின்றி நடைபெறுவதாக வவுனியா தபால்அதிபர் சி. கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தபாலகத்துக்கு வந்து ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டையை பெறலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(வ)

## ஐரோப்பிய ..

தலைமையில் மூவர் அடங்கிய குழுவொன்று நேற்று இரண்டாவது தடவையாக திருமலைக்குச் சென்றிருந்தது

இக்குழுவினர் திருமலை அரச அதிபரையும், தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோரைச் சந்தித்துள்ளனர்.

(வ)

## கூட்டணி...

டணிக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவண்ணம் இருந்தனர்,

கூட்டணி அலுவலகத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் முதன்மை வேட்பாளருமான வீ. ஆனந்தசங்கரிக்கு எதிரான கோஷங்களை எழுப்பிய வண்ணம் அலுவலகத்திற்குள் நுழைய முற்பட்டனர்.

அப்போது அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரரை தடுத்த போதும் மக்கள் ஆவேசத்துடன் அங்கிருந்த கூட்டணியினரின் பெயர்ப்பலகையை உடைத்தெறிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது அப்பகுதியில் பலத்த பதற்றம் நிலவ மேலதிக பொலிஸார் அப்பகுதிக்கு விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்களால் வீ.ஆனந்த சங்கரியின் கொடும்பாவி கூட்டணி அலுவலகத்தின் முன் தீமூட்டி எரிக்கப்பட்டது.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஈ.பி.டி.பி அலு

## ஆர்ப்பாட்டம்...

துள்ளார்.

இதுவிடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் சில கும்பல்கள் அவதூறு வார்த்தைகளால் தூசித்த வண்ணம் அலுவலகத்தினுட் புகமுயன்றார்கள் அங்கு நின்ற பொலிஸார் மிகுந்த சிரமத்தின் மத்தியில் அவர்களை தடுத்து நிறுத்தினர். அந்த நேரத்தில் நான் அங்கு சென்று கூச்சலை நிறுத்தி உங்கள் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாட வருமாறு அழைத்தேன் நிதானம் தவறி நின்றவர்கள் எனது கூற்றை செவி சாய்க்காது தொடர்ந்து கூக்குரலிட்டவாறு எமது பதாதைகள் விளம்பரங்களைச் சேதப்படுத்தியவாறு அரைமணி நேரம் வரை நின்றனர். பின் திரும்பிச் செல்கையில் எமது பெயர்ப்பலகையை அடித்து உடைத்து சேதப்படுத்திய பின் வீதியில் வைத்து எதையோ எரித்து எறிந்ததையும் அவதானித்தேன்.

இச்சம்பவங்களின் பின்னணியிலிருந்தவர்கள் யார் என்பதை மக்கள் அறிவார்கள் இவ் அராஜகச் செயலிற்கான பதிலை மக்கள் இன்னும் சில நாட்களில் நடைபெற உள்ள தேர்தலின் மூலம் அவர்களுக்குப் புகட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

அதன் மூலம் நெடுந்தீவு மக்களுக்கும் ஏனைய தீவக மக்களுக்கும்விடுதலையையே. அத்தீவக மக்கள் சுதந்திரம்

# வல்லைப்பாலம் திருத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாது சேதமடைந்துள்ள வல்லைப்பாலத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி இப் பாலத்தைத் திருத்துமாறு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தா அரச அதிபருக்கு விடுத்த பணிப்புரைக்கமையவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ந-2)

## வாக்களிப்பவர்கள்...

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.வாக்களிப்பவர்கள் மக்களே, அவர்களிடம் பல்வேறு வேட்பாளர்கள் தமது கருத்தைச் சொல்வார்கள், அதனை ஏற்பதும் நிராகரிப்பதும் மக்களுடைய தீர்மானத்துக்குரிய விடயம். இதில் எவரும் தலையிட்டு தமது ஆதிக்கத்தை நிறுவக் கூடாது.

இச் செயற்பாடுகளை தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் மனித உரிமை அமைப்புக்கள் கவனமெடுக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

(ந-2)

## தீவக...

விடுவிக்கப்பட்டபோது அப்பகுதிமக்களின் உணர்வுகளை துன்பதுயரங்களை மதித்து சேவையாற்றுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட அனைத்து கட்சிகளையும் அரசாங்கம் கேட்டது ஆனால் இக்கட்சிகள் இதனை மறுக்கவே ஈ.பி.டி.பி தனக்கு கிடைத்த வாய்ப்பினை பயன்படுத்தி அர்ப்பணிப்புடன் தீவக மக்களுக்கு சேவை செய்தது.

தீவக மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் போது ஆடு மாடுகளுக்கும் பனை மரங்களுக்கும் நிவாரணம் வழங்குகிறார்கள் என்று எம்மையும் தீவக மக்களையும் சக அரசியற் கட்சிகள் விமர்சித்தார்கள் ஆனால் தேர்தல் நலனுக்காக மட்டும் உண்மைக்கும் புறம்பான விமர்சனங்களை தீவகமக்கள் மீது முன்வைத்துள்ளனர்.

எனவே இத்தகைய குறுகிய அரசியல் நலன்களை கருத்திற் கொண்ட மக்களின் உணர்வுகளை மதிக்காமல்

# அகிலேஸ்வரனை பிணையில் விட நடவடிக்கை எடுக்கவும்

## உயர்நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கண்டி போகம்பரைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தேசிய ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் சிவஞானம் அகிலேஸ்வரனை பிணையில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சிவஞானம் அகிலேஸ்வரன் தன்னை தடுத்து வைத்திருப்பது மனித உரிமை மீறல் என கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனு மீதான விசாரணைகளை நீதியரசர்கள் சரத் என் சில்வா, பிரியந்த பெரேரா. எல்.எச். வீரசேகரா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரச தரப்பில் ஆஜரான பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆஜராகி வாதிட்டார்.

(வ)

# உப அதிபரின் மரணத்தில் மர்மம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் உப அதிபர் சுந்தரம் யோகானந்தத்தின் மர்மமான மரணம் குறித்து கோப்பாய் பூதர் மடம் பகுதியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்பதுள்ளனர்

இம் மரணம் குறித்து யாழ் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் தலையில் ஏற்பட்ட பலத்த அடிகாயமே மரணத்திற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பொலிஸார் போதிய விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ந-4-79)

## தற்கொலை..

பொதுமக்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

47 தற்கொலை குண்டுதாரிகளில் சரவணமுத்து கௌரியன், இளவரசன்ரமேஷ் ஆகிய இரு இளைஞர்கள் புகைப்படங்களுடன் நகரில் ஊடுருவியிருப்பதாகவும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

(வ)

## புலிகள்...

வவுனியா

சிறப்பு எல்லைப்படை வீரர்களான

● லக்ஸ்மன்
(நாகராசா லக்ஸ்மன்)
மட்டக்களப்பு

● சங்கன்/பத்மசீலன்
(துரைசிங்கம் சற்குருநாதன்)
யாழ்ப்பாணம்

● ஜதீஸ்
(சின்னராசா ஜதீஸ்வரன்)
யாழ்ப்பாணம்

ஆகியோரும் கடந்த 26ம் திகதி சாவகச்சேரிப் பகுதியில் இடம் பெற்ற மோதலில்

● அகவன்பு
(செல்வராசா தீபா)

என்ற போராளியும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(ந-5)

## வாக்களிப்பு...

துள்ளதாவது: வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களுக்கு செல்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டவர்கள், தெரிவத்தாட்சி அலுவலர்கள், வாக்கு எண்ணும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் செல்லலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களின் அதிகாரம் அளிக்

## இந்துக...

இது தொடர்பாக ஐயப்பதாஸ குருக்கள் உரையாற்றும் போது இந்துக் கோவில் ஒன்றில் ஒரு சம்பவம் இடம் பெற்றால் அது எல்லாக் கோவில்களையும் குறிப்பதாக அமையக் கூடாது இச் சம்பவங்களினால் இந்து மதகுருமார் நிந்திக்கப் படக் கூடாது இந்து குருமார் நிந்திக்கப்படுவது குறித்து ஜனாதிபதிக்கு தெரிவித்திருந்தோம் ஆனால் ஜனாதிபதி எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று கூறினார்.

(வ)

## தேர்தல்...

எதுவுமே நடைபெறவில்லை என வவுனியா மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர். அதிகமான முறைப்பாடு ஈ. பி. ஆர். எல். எவ். இரு அணிகளுக்கிடையிலானது என பொலிசார் தெரிவித்தனர்.

(வ)

ஸ்ரீ செல்வா
(யாழ்ப்பாணம்)

...நம்புகிறேன்.

அதன் மூலம் நெடுந்தீவு மக்களுக்கும் ஏனைய தீவக மக்களுக்கும்விடுதலையையே. அத்தீவக மக்கள் சுதந்திரம் வேண்டாம் நாம் அடங்கி ஒடுங்கி வாழவே விரும்புகின்றோம் என்று ஆர்ப்பாட்டம் செய்வார்கள் என்று நான் கடுகளவும் நம்பவில்லை என அவர் விடுத்துள்ள அறிக்கை மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...கூட்டணி அலுவலகத்தின் முன் தீமூட்டி எரிக்கப்பட்டது.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்துக்குச் சென்ற போது ஆர்ப்பாட்டக் காரர்களை கலைந்து செல்லுமாறு கோரியதாகவும் அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக் காரர்கள் கலைந்து சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-க-83,03)

...எங்களை தீவகமக்கள் மீது முன்வைத்துள்ளனர்.

எனவே இத்தகைய குறுகிய அரசியல் நலன்களை கருத்திற் கொண்ட மக்களின் உணர்வுகளை மதிக்காமல் அரசியல் நடத்துபவர்களுக்கு உணர்வு கொண்டெழுந்த மக்கள் பதில் அளித்துள்ளார்களே ஒழிய நாம் இதனை ஏற்பாடு செய்யவில்லை என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

...கள், வாக்கு எண்ணும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் செல்லலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்களும், சர்வதேசகண்காணிப்பாளர்களும் அனுமதிக்கப்படுவர்.

இதேவேளை செலுலர் தொலைபேசியையும் இந்நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (வ)


ஸ்ரீ செல்வா
(யாழ்ப்பாணம்)
அர்ஜுன் - மீனா
நடித்த
ரிதம்
புதிய வெளியீடு
10.30-2.00 (ப.நே)




வீணையே உங்கள் சின்னம்!   சேவையே எங்கள் எண்ணம்

# உங்கள் வாக்கு வீணைக்கே!

90 களில்
தீவக மக்களை ஜடப்பொருட்கள் என்றனர்!
இன்று
தீவக மக்களிடம் நீலிக்கண்ணீர் வடித்து
வாக்குப் பிச்சையா?
சிந்திப்பீர்...

(ஈ. பி. டி. பி)



(இ/736)

தீவக அபிவிருத்திக்காக ஈ. பி. டி. பி யினால் வென்றெடுக்கப்பட்ட வேலணைப் பிரதேச சபையினால்,
இவ்வாண்டு 10 இலட்சம் ரூபா செலவில் குறிகாட்டுவானில் யாத்திரிகள்மடம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.